## 5

# ஜீவனைக் கொடுத்த மனிதர்

## (2 இராஜாக்கள் 4:8-17)

*எலிசாவின் வாழ்வில் நன்கு அறியப்பட்ட சம்பவங்களில் ஒன்றாக இருப்பது, அவர் தங்குவதற்காக "தீர்க்கதரிசியின் அறை"யைக்கட்டி தந்து, அதினால் ஒரு ஆண்குழந்தையால் ஆசீர்வதிக்கப்பட்ட பெண்ணின் சம்பவமாகும். சிறுவர் வேத வகுப்புகளில் இந்த கதை அவர்களுக்கு பிடித்தமான ஒரு கதையாக இருக்கிறது. நான் இந்த சம்பவத்திலுள்ள நமது பாடத்தை "ஜீவனைக் கொடுத்த மனிதர்" என அழைக்கிறேன்.*

### விருந்தோம்பல் கொடுக்கப்பட்டது (4:8-11)

*எலிசா இஸ்ரவேல் முழுவதும் அதிக அளவில் பயணம் செய்தார். அவர் அடிக்கடி பயணம் செய்த வழித்தடம் (வசனங்கள் 8, 9) ராஜாவின் கோடைகால அரண்மனை அமைந்திருந்த யெஸ்ரேலிலிருந்து (1 இராஜாக்கள் 18:46; 21:1), எலிசா பாகால்களின் (1 இராஜாக்கள் 18) தீர்க்கதரிசிகளை மேற்கொண்ட கர்மேல் பர்வதம் (2 இராஜாக்கள் 4:25), வரை அவரை நடத்தியது. அநேகமாக எலிசா தன் பொதுவான ஊழியத்தின் அழுத்தங்களிலிருந்து விலகி, ஓய்வு மற்றும் மதிப்பீடு செய்வதற்காக கர்மேல் பர்வதத்திற்குச் சென்றார்.*

*யெஸ்ரேலில் இருந்து மூன்று மைல் வடக்கில், கர்மேல் பர்வதத்திற்கு செல்லும் சாலையில் சூனேம் என்னும் ஒரு கிராமம் அமைந்திருந்தது (காண்க யோசுவா 19:18; காண்க வரைபடம்). சூனேம், "என்றும் பசுமையான ஒலிவத்தோப்புகள் மற்றும் கதிர்கள் அசைவாடும் தானிய வயல்கள்" மத்தியில் உயரமான மலைத் தொடரில் அமைந்திருந்தது. "அது பெரும்பாலும் விவசாயிகளை கொண்ட, வசதியான மற்றும் எளிமையான" ஒரு சிறிய பட்டணமாக இருந்தது.[1] புவியியல் ரீதியாக, யெஸ்ரயேல் மற்றும் சூனேம் பட்டணங்கள் சில மைல்கள் இடைவெளியில் அமைந்திருந்தன, ஆனால் தேவனுக்கு பயப்படும் காரியத்தில் அவைகள் ஒன்றுக்கொன்று தொலைவில் இருந்தன. யெஸ்ரயேல் நீண்ட காலமாகவே அரசு குடும்பத்தின் அக்கிரம மையமாக இருந்தது (காண்க 1 இராஜாக்கள் 21; 2 இராஜாக்கள் 9:30); ஆனால் சூனேம் கிராமத்தில், ஒரு சிலருடைய இருதயத்தில் விசுவாசத்தின் ஜுவாலை இன்னமும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.*

#### விருந்தோம்பலுக்கான ஒரு முன்மாதிரி

*நமது கதையின் துவக்க வசனத்தில் சூனேமில் இருந்த விசுவாசிகளில் ஒருவர் குறிப்பிடப்படுகிறார்: "பின்பு ஒரு நாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும் போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ ..." (2 இராஜாக்காள் 4:8அ). இந்த பெண்ணின் பெயர் நமக்கு தெரியவில்லை. ஆனால் அவள் தாய்மை அடையும் வயதில் இருந்தாள் மற்றும் அவள் வயதான ஒரு கணவருக்கு*

மணம்முடித்து கொடுக்கப்பட்டிருந்தாள் என்பது நமக்கு தெரிகிறது[2] (வசனம் 14). மேலும் அவர் ஒரு விவசாயி ஆக இருந்தார் (வசனம் 18). அவள் "கனம்பொருந்தியவள்" என நமக்குச் சொல்லப்படுகிறது. இந்த வார்த்தை அவளுடைய சமூக அந்தஸ்தை காட்டிலும் அவளுடைய செல்வநிலையை அதிகமாக குறிப்பிடுவதாக இருக்கும்.[3] NIV மொழிபெயர்ப்பு, "அவள் வசதியானவள்" ஆக இருந்தாள் என்று குறிப்பிடுகிறது. மிகவும் முக்கியமாக, விக்கிரக ஆராதனை மற்றும் அவபக்தி நிறைந்த தேசத்தில் அவள் கர்த்தருக்குள் வலிமையான விசுவாசம் உடையவளாக இருந்தாள் (காண்க வசனங்கள் 9, 16; 1 இராஜாக்கள் 19:18).

ஏதோ ஒரு விதத்தில், இந்த பெண் எலிசாவின் தொடர்பில் வந்தாள். ஒருவேளை எலிசா தான் பயணித்த ஒவ்வொரு பட்டணத்திலும் பிரசங்கம் செய்துவிட்டு செல்லக்கூடியவராக இருந்த நிலையில், அதை அந்தப்பெண் கேட்டிருந்தாள். அந்த சமயத்தில் அவர் நன்கு அறியப்பட்டவராக இருந்தபடியால், ஒருநாள் அவர் அந்த கிராமத்தின் வழியாக சென்றபோது, அவள் அவரை அடையாளம் கண்டு கொண்டாள். எப்படியிருந்த போதும், அவள் அவரை பார்த்து தன் வீட்டில் உணவருந்த வரும்படி அழைத்தாள். அந்த வசனப்பகுதி, "அவனை போஜனம் பண்ண வருந்திக்கேட்டுக்கொண்டாள்" என்று கூறுகிறது (2 இராஜாக்கள் 4:8ஆ). CJB மொழிபெயர்ப்பு, "அவள் வரும்படி வற்புறுத்தினாள்" என கூறுகிறது; NIV மொழிபெயர்ப்பு, "அவள் வற்புறுத்தி கேட்டுக்கொண்டாள்" எனவும்; NCV மொழிபெயர்ப்பு, "அவள் கெஞ்சி கேட்டாள்" எனவும் கூறுகிறது. "இல்லை என்ற பதிலை அவள் ஏற்றுக்கொள்ள மாட்டாள்" என இதை நான் வாழும் பகுதியில் கூறுவோம்.

எலிசா அவளுடைய அழைப்பை ஏற்பதில் மகிழ்ச்சியாக இருந்தார். பெரும்பாலான பிரசங்கியார்கள், வீடுகளுக்கு உணவருந்த அழைக்கப்படுவதை மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த சமயத்தில் எலிசா, கேயாசி என்ற ஒரு வேலைக்காரனை உடையவராக இருந்தார் (வசனம் 12). ஆகவே இந்த அழைப்பு என்பது *இருவருக்கும்* கொடுக்கப்பட்டிருந்தது.

நம்முடைய முந்தைய பாடத்தில், வறுமையிலிருந்த ஒரு பெண்ணுக்கு எலிசா உதவி செய்தார்; இந்த பாடத்தில் செல்வ சீமாட்டியான ஒரு பெண்ணுடன் சம்பந்தப்படுகிறார். "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (நடபடிகள் 10:34). எலியாவும் அப்படியே இருந்தார். அவர் அதிகாரமுடையோர் மற்றும் அதிகாரம் அற்றோர்; செல்வந்தர் மற்றும் வறியவர் என்ற பேதமின்றி அனைவருடனும் சாதாரணமாகப் பழகினார்.

உணவு அருந்திவிட்டு, எலிசா புறப்படுகையில், அந்த பகுதிக்கு வரும்போதெல்லாம் தன் வீட்டில் உணவருந்த வரும்படி அவள் வற்புறுத்தி அழைத்தாள். 8ஆம் வசனத்தின் இறுதி பகுதி, "அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்" என கூறுகிறது. அந்த வீட்டாரில் யார் சமையல் செய்தார்களோ, அவர்கள் சிறப்பான சமையல்காரராக இருந்திருக்கிறார்கள். பிரசங்கியார்கள் வீட்டில் சமைக்கப்படும் உணவுக்கான அழைப்பை விரும்பி ஏற்கிறார்கள்; ஆனால் உணவு ருசியற்றதாக அல்லது சாப்பிட முடியாததாக இருக்குமானால், மறுமுறை அங்கு செல்லாமல் இருப்பதற்கான காரணத்தை கண்டுபிடிப்பார்கள்.

வேதாகமம் சூனேமியாளுடைய வீட்டில் உணவைப் பற்றிய குறிப்புகள் எதையும் நமக்கு தெரிவிப்பதில்லை, ஆனால் உணவு மேசையில் நடந்த

*உரையாடலை கற்பனை செய்வது கடினமானது அல்ல. எலிசா எலியாவோடு இருந்த ஆச்சரியமான ஆண்டுகள் - மற்றும் யெகோவா எவ்விதம் அவர்களோடிருந்தார் என்பது பற்றி அவர் கூறுவதை என்னால் கொஞ்சங்குறைய கேட்க முடிகிறது. அந்த பெண் புன்முறுவல் செய்த மற்றும் தலையை அசைத்த காட்சியை என்னால் காணமுடிகிறது. அவள் நிச்சயமாகவே தீர்க்கதரிசியின் திடமான விசுவாசத்தால் பெலப்படுத்தப்பட்டிருந்தாள், அவரும் தேவ பக்தியற்ற தேசத்தில் ஒரு விசுவாச பெண்ணை பார்த்ததால் உற்சாகப்படுத்தப்பட்டிருந்தார். ஒரே வகை விசுவாசமுள்ளவர்களோடு நாம் நேரம் செலவழிப்பது நமக்கு எவ்வளவு அருமையாயிருக்கிறது!*

*நீங்கள் கதையை வாசிக்கும்போது, அவள்தான் அந்த குடும்பத்தாரின் ஆவிக்குரிய காரியங்களில் பொறுப்பேற்று நடத்த வேண்டியிருந்தது என்பதை கண்டுபிடிப்பீர்கள் (வசனங்கள் 8, 9, 25). ஒரு கணவர் அல்லது தந்தைதான் அந்த குடும்பத்தின் ஆவிக்குரிய காரியங்களில் நடத்துனராக இருக்கவேண்டுமென வேதம் போதிக்கிறது (எபேசியர் 6:4), ஆனால் பல குடும்பங்களில் அப்படி இருப்பதில்லை. ஒரு பெண் தான் இந்த நிலையில் இருப்பதை காண நேர்ந்தால் என்ன செய்யவேண்டும்? சூனேமியப் பெண் செய்ததுபோல செய்யுங்கள்: உங்கள் விசுவாசத்தை பராமரித்துக் கொள்ளுங்கள் மற்றும் உங்கள் கணவர் சரியானதை செய்ய அவரை உற்சாகப்படுத்துங்கள் (காண்க 1 பேதுரு 3:1, 2).*

*ஒருநாள், "அவள் தன் புருஷனை நோக்கி இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்" என்றாள் (வசனம் 9). "பரிசுத்தம்" என்ற வார்த்தையின் பொருள் "பிரித்து வைக்கப்படுதல்" என்பதாகும். பழைய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில்தான் ஒரு தீர்க்கதரிசியை குறிப்பிடுவதற்கு "பரிசுத்தம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.[4] துக்ககரமாக,* தங்களை *"தேவமனிதர்" என அழைத்துக்கொள்ளும் சிலர் பரிசுத்தவான்களாக இருப்பதில்லை. எலிசாவை அடிக்கடி சந்தித்ததில், அவர் உண்மையிலேயே "பிரித்து வைக்கப்பட்ட" தேவனுடைய சிறப்பு பிரதிநிதி என்பதை அவள் நன்கு புரிந்துகொண்டாள்.*

*அவள் தன் கணவரிடம் ஒரு ஆலோசனையை முன்வைத்தாள். "நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக்கூட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம்" என்றாள் (வசனம் 10). தனது வீட்டின் மொட்டை மாடியில் தீர்க்கதரிசிக்காக ஒரு சிறிய அறையை கட்ட விரும்பினாள் (CJB மொழிபெயர்ப்பை காண்க). தேவனுடைய தீர்க்கதரிசிகளின் எளிமையான வாழ்க்கை முறைக்கேற்ப - அங்கே சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும் - அது அவருக்கான பிரத்தியேகமான அறையாக இருக்கும். அது நெருக்கடியான மற்றும் பரபரப்பான உலக சூழலிருந்து விலகியிருப்பதற்கான ஒரு அடைக்கலமாக இருக்கும். (ஒருவருக்கான மரச்சாமான்கள் குறிப்பிடப்படுகின்றன, எலிசாவின் வேலைக்காரன் கேயாசிக்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கும் [வசனங்கள் 11, 12].)*

*இதற்கு கணவர் எப்படி பதிலுரைத்தார் என நமக்கு தெரியவில்லை. அவர் ஆர்வமாக பதிலளித்தாரா அல்லது தன் மூலம் மனைவியை உற்சாகப்படுத்துவதற்காக அவள் ஆலோசனையை ஒப்புக்கொண்டாரா? குறைந்தபட்சம் இந்த ஆலோசனைக்கு சம்மதித்தார் - அந்த அறை*

*கட்டிமுடிக்கப்பட்டது. அது அளவில் சுமாராக இருந்த போதிலும் - தேவையான எல்லாம் சரியான இடத்தில் வைக்கப்படுவதை அந்த பெண் உறுதி செய்தாள் என்பது உங்களுக்கு தெரியாதா? அந்த அறையை முதல் முதல் எலிசாவுக்கு காண்பித்து அது அவருக்குரியது என்று சொன்னபோது, அவள் முகத்திலிருந்த புன்முறுவலை என்னால் கற்பனை செய்யமுடிகிறது. எலிசா சந்தேகத்திற்கு இடமின்றி, மகிழ்ச்சியடைந்தார். அவர் அப்பகுதிக்கு வந்த போதெல்லாம். அவர் தங்கி ஓய்வு எடுப்பதற்கு இப்போது ஒரு இடம் இருந்தது (வசனம் 11). சூனேமிய பெண்ணின் இந்த தாராளகுணமுள்ள செயல், ஆயிரக்கணக்கானவர்களை உற்சாகப்படுத்தாமலிருந்தாலும், நூற்றுக்கணக்கானவர்கள் தங்கள் வீடுகளில் "தீர்க்கதரிசியின் அறைகளை" உண்டுபண்ணுவதற்கு அவர்களை ஏவியுள்ளது: ஊழியத்திற்கு வரும் பிரசங்கியார்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட பிரத்தியேக அறைகளாக அவைகள் இருக்கின்றன.*

**விருந்தோம்பலுக்கான ஊக்குவிப்பு**

இந்த பெண்ணை விவரிப்பதற்கான ஒரு வார்த்தை உண்டு: *விருந்தோம்பல்.* ''விருந்தோம்பலுக்குரிய'' மற்றும் ''விருந்தோம்பல்'' ஆகிய வார்த்தைகள் "விருந்தினர்" என பொருள்படும் கோஸ்பஸ் என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்துள்ளது. "விருந்தோம்பல்" என்பது மற்றவர்களை வேறு ஒரு வார்த்தையில் கூறுவதானால் ''விருந்தினர்களை'' கனிவோடும் தாராளமனதோடும் நடத்துவதாகும். விருந்தோம்பல் என்பது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் முக்கியமான பாடமாக இருக்கிறது. மூப்பர்களுக்கான தகுதிகளில் ஒன்றாக விருந்தோம்பல் உள்ளது (1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:8). பேதுரு, "முறுமுறுப் பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" என்றார் (1 பேதுரு 4:9).

எபிரெயருக்கு எழுதின ஆசிரியர், "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" என்றார் (எபிரெயர் 13:2). இது அநேகமாக, ஆபிரகாம் ஆதியாகமம் 18இல் தேவதூதரை உபசரித்ததை குறிப்பிடுகிறது (வசனங்கள் 1-8, 16, 22; காண்க 19:1). நாம் இப்போதும் "அறியாமல்" தேவதூதரை உபசரிப்பது சாத்தியமா? எபிரெயர் 13:2 அதை கூறவில்லை; மாறாக நீண்ட காலத்திற்கு முன்னர் நடந்த சம்பவத்தை அது குறிப்பிடுகிறது. இன்றைக்கு அது சாத்தியமா அல்லது சாத்தியமில்லையா என்பதை சிந்திப்பதில் சிறிதளவே நோக்கம் இருக்கிறது - அது சாத்தியமாக இருந்தாலும், நாம் அதை ஒருபோதும் அறியாமல் இருப்போம்! இந்த வசனப்பகுதியின் கருத்து என்னவென்றால், நாம் ஒவ்வொரு அந்நியரையும் அவர் கர்த்தரிடமிருந்து நேரடியாக *வந்ததாக எண்ணி* நடத்த வேண்டும் (காண்க மத்தேயு 25:35, 38, 40)!

நீங்கள் ஒரு உபசரிப்பு மிக்க குடும்பத்தில் வளர்க்கப்பட்டிருந்தால், என்ன *அருமையான* நினைவுகளை நீங்கள் உடையவர்களாக இருக்கிறீர்கள்! "இன்னும் ஒருவரை உபசரிப்பதற்கு எப்போதும் வாய்ப்பு இருக்கிறது!" என ஒரு தந்தை கூற அநேகமாக அதை நீங்கள் கேட்டிருக்கலாம். ஒரு விருந்தினர்/பார்வையாளர் உணவு மேசைக்கு வரப்போகிறார் என்பதை அறிந்த தாயின் கண்கள் விரிந்ததை ஒரு வேளை நீங்கள் பார்த்திருக்கலாம். ஒரு பிரசங்கியார் ஞாயிறு மாலை உணவுக்கு வருகை தந்தது அல்லது தொடர் நற்செய்தி கூட்டங்களுக்காக வருகைதந்த சுவிசேஷகர் வீட்டில் தங்கியிருந்தது போன்ற சிறப்பான நினைவுகள்

சிலருக்கு வரலாம். ஆண்டுகளாக, கிறிஸ்துவுக்குள்ளான பல சகோதர, சகோதரிகள் அப்படியாக, அவர்கள் தந்தைமார் இரவு உணவு வேளையில் பிரசங்கியார்களோடு தேவன் மற்றும் அவருடைய வார்த்தையைக் குறித்து பேசிய நாட்களில், தங்களுடைய தனிப்பட்ட விசுவாசம் உருவாகி, வளர்ந்தது என்பதை என்னிடம் கூறியுள்ளார்கள்.

ஒருவேளை, சிலர் இப்படி சிந்தித்து தயங்கக்கூடும், "எனது வீடு விருந்தினரை வரவேற்கக்கூடிய அளவுக்கு நல்லதல்ல," அல்லது "நாங்கள் சாப்பிடவேண்டியதாயிருப்பதை மற்றவர்களுக்கு கொடுப்பதில் நான் சங்கடப்படுவேன்." எபிரெயர் 13:2ல் "உபசரித்ததுண்டு" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்தாலும், ஒரு எழுத்தாளர் அந்த வார்த்தை இன்று சில சமயம் பயன்படுத்தப்படுவதின் அடிப்படையில், உபசரிக்கும் குணத்தோடு இருப்பதற்கும், ஒருவரை "உபசரிப்பதற்கும்," வேறுபாடு உண்டு என குறிப்பிடுகிறார்.[5]

- விருந்தோம்பல் கூறுகிறது, "அதிகமோ அல்லது குறைவோ, என்னிடம் என்ன இருக்கிறதோ, அது தேவனுடைய ஒரு ஈவாக இருக்கிறது. அதை அவருக்காக பயன்படுத்த விரும்புகிறேன்," "என்னிடமுள்ளதை வைத்து நான் ஒரு பெரிய ஆள் என காட்டிக்கொள்வதற்காக அல்ல."
- விருந்தோம்பல் மெல்லிய குரலில் பேசுகிறது, என்னுடையது எல்லாம் உன்னுடையது, பயன்படுத்திக்கொள். "இது என்னுடையது, இதை பாராட்டு," என கூச்சலிடுவதற்குப் பதிலாக.
- விருந்தோம்பல் பாராட்டுகளை தேடாமல் சேவை செய்வதை தேடுகிறது.
- உலகப்பிரகாரமான "உபசரிப்பு" விருந்தினரை பதில் செய்ய கடமைப்பட்டவரென நினைக்க தூண்டுகையில், விருந்தோம்பல் பார்வையாளருக்கு தன் சொந்த குடும்பத்தில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

கையிலுள்ள பரிசுபொருளைவிட, இருதயத்திலுள்ள தாராளகுணமே சிறந்ததாக இருக்கிறது. இயேசுவானவர், "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம்," "ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்க கொடுக்கிறவனும்," "தன் பலனை அடையாமற்போகான்" என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார் (மத்தேயு 10:42). தேவன்தாமே நாம் எல்லாரும் விருந்தோம்பல் கலையை வளர்க்க நமக்கு உதவி செய்வாராக.

## விருந்தோம்பலுக்கு பலன் கிடைத்தது (4:11-17)

***நன்றி: ஒரு தேவை***

ஒருநாள், "எலிசா அங்கே வந்து, அந்த அறை வீட்டிலே தங்கி, அங்கே படுத்துக்கொண்டிருந்தான்" (வசனம் 11), தனக்கு அளிக்கப்பட்ட விருந்தோம்பலை மகிழ்வுடன் அனுபவித்து கொண்டு, இதற்கு எந்த விதத்தில் நன்றியை தெரிவிப்பது என யோசித்துக் கொண்டிருந்தார். இயேசு கிறிஸ்து, "தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்கிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்" என்றார் (மத்தேயு 10:41அ).

*“தீர்க்கதரிசிக்கேற்ற பலனை” அந்த பெண் பெற வேண்டிய தருணம் அது என எலிசா முடிவெடுத்தார்.*

*“அவன் தன் வேலைக்காரனாகிய கேயாசை நோக்கி: இந்த சூனேமியாளை அழைத்துக் கொண்டுவா” என்றான் (2 இராஜாக்கள் 4:12அ). இப்போதுதான் கேயாசை பற்றி முதல் முதலில் வாசிக்கிறோம். எலிசா எலியாவுக்கு ஊழியம் செய்ததுபோல் இவன் எலிசாவுக்கு ஊழியம் செய்தான் - ஆனால் இந்த இரண்டு வேலைக்காரரின் குணாதிசயங்களிலும் எத்தனை பெரிய வித்தியாசம் இருந்தது! இதை பற்றி பின்னர் அதிகம் கூறுவோம்.*

*கேயாசி, “அவளை அழைத்துக்கொண்டு வந்தான்; அவள் அவனுக்கு முன்பாக நின்றாள்” (வசனம் 12ஆ). எலிசா அவளிடம் பேசவில்லை. மாறாக, அவர் கேயாசியைப் பார்த்து: “இதோ இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?” என்று கேள் என்றான் (வசனம் 13அ). எலிசா அவளிடம் ஏன் நேரில் பேசவில்லை என்பது நமக்கு நிச்சயமாக தெரியவில்லை. (பின்னர், அவர் அவளிடத்தில் நேராக பேசினார். காண்க வசனங்கள் 15 மற்றும் 16.) அந்த சந்திப்பின் பின்புலம் படுக்கை அறையாக இருந்தபடியால், சில சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டியிருந்தன என பல எழுத்தாளர்கள் கருதுகின்றனர்.[6]*

*அந்த நாளின் பழக்க வழக்கங்களைப் பற்றி எனக்கு தெரியவில்லை, ஆனால் தேவனுடைய ஊழியக்காரர் எதிர்பாலினத்தவரை கையாளுவதில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பது எனக்கு தெரியும். நான் ஒரு முழுநேர ஊழியராக இருந்த போது, ஒரு பெண் எனது வேத வகுப்புக்கு வந்தால், நான் எப்போதும் அறை கதவை திறந்து வைத்திருப்பேன். (சபை செயலரின் அலுவலகம் அருகாமையில் இருந்தது.) ஒரு பெண்ணின் வீட்டில் சந்திப்பதற்கு அல்லது வேத வகுப்பை நடத்துவதற்கு நான் ஒருபோதும் தனியே செல்வதில்லை, எனது மனைவி எப்போதும் என்னோடு சென்றாள். வேறு எந்த ஒழுக்க ரீதியான பிரச்சனைகளையும் விட பாலுணர்வு சம்பந்தப்பட்டவைகள் பிரசங்கியார்களை அதிகமாக அழித்திருக்கின்றன.*

*மறுபடியுமாக, எலிசா அந்தப் பெண்ணிடம் கூறிய வார்த்தைகளை பாருங்கள்: “இதோ, இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?” (வசனம் 13அ). தமிழில் “சலக்கரணை” என மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை “கரிசனை”[7] அல்லது “ஆவலோடு” என பொருள்படும். இன்றைய நடைமுறையில், “நீ எங்களுக்காக மிகவும் *கரிசனையோடு* இருந்தாய்” என்று கூறுவோம். NIV மொழிபெயர்ப்பில், “நீ எங்களுக்காக இவ்வளவு சிரமங்களை ஏற்றுக்கொண்டாய்” என்றுள்ளது. CJB மொழிபெயர்ப்பு வசனம் 13இன் முதல் பகுதியை மொழிபெயர்த்துள்ள விதத்தை நான் விரும்புகிறேன்: “நீ எங்களுக்கு மிகவும் அதிகமான *உபசரிப்பை* காண்பித்துவிட்டாய்! நான் எனது *பாராட்டை* தெரிவிக்க உனக்கு என்ன செய்யவேண்டும்?” (என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

*நம்மில் பலர் அதிக உபசரிப்பு உள்ளவர்களாக மாறுவதற்கு முயற்சி செய்ய வேண்டிய அவசியம் உண்டு; நாம் *எல்லாரும்* மற்றவர்களை அதி கமாய் பாராட்டக்கூடியவர்களாக மாற வேண்டிய அவசியமுண்டு. அப்போஸ்தலனாகிய பவுல், “தேவசமாதானம் உங்கள் இருதயங்களில்*

ஆளக்கடவது ... ; நன்றியறிதலுள்ளவர்களுமாயிருங்கள்'' என்றார் (கொலோசெயர் 3:15). எபிரெயர் நிருபத்தின் ஆசிரியர், ''அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் நன்றியை காண்பிப்போம் ...'' என கூறுகிறார் (KJV தவிர பிற ஆங்கில மொழிபெயர்ப்புகளில்) (எபிரெயர் 12:28அ). பவுல் பொல்லாதவர்களை குறித்து விவரித்தபோது, இந்த குணாதிசயத்தையும் இணைத்து: "நன்றியறியாதவர்களையும்" என கூறினார் (2 தீமோத்தேயு 3:2).

C. E. மெக்கார்ட்னி, ''நன்றியுணர்வு இல்லாதிருத்தல் என்ற பாவமே மிக பொதுவான பாவமாக இருக்கிறது''[8] என எழுதினார். ஒரு குறைகூறும் குணமுள்ளவன், "நீங்கள் நன்றியை (யுணர்வை) கண்டுபிடிக்க விரும்பினால், அதை அகராதியில் பாருங்கள்'' என்றான்.[9] ஒரு சிறு குழந்தை கூட நூறுவரை எண்ண கற்றுக்கொள்கிறது; நாம் நமது ஆசீர்வாதங்களை எண்ண கற்றுக்கொள்ளவேண்டும்.

"நன்றி கூறுவதற்கு முன்னால், பெற்ற நன்மைகளை நினைத்துப்பார்ப்பது வருகிறது" என யாரோ ஒருவர் கூறியுள்ளார்.[10] நாம் காரியங்களை கருத்தாய் சிந்தித்தால், நாம் நன்றி சொல்வதற்கான நிறைய காரியங்கள் எப்போதுமே இருக்கின்றன என்பதை கண்டுபிடிப்போம். இதை எடுத்துரைக்கும் கதைகளை நான் விரும்புகிறேன். கடும் புயல் வீசிய ஞாயிறன்று ஜெபித்த மனிதனை பற்றி ஒரு கதை இவ்விதம் வருகிறது. அவர், ''கர்த்தாவே இது போன்ற கடுமையான புயல் எப்போதும் வீசாமல் இருப்பதற்காக நன்றி"[11] என்றார். திருடரால் வழிமறிக்கப்பட்டு, பொருள்கள் களவாடப்பட்ட மேத்யு ஹென்றி என்பவருடைய கதை சுவாரஸ்யமானது அவர் தனது நாட்குறிப்பேட்டில், பின்வரும் வார்த்தைகளை எழுதிவைத்தார்:

> முதலாவதாக, இதற்கு முன்னர் ஒருபோதும் என் பொருட்கள் கொள்ளையடிக்கப்படாமல் இருந்ததற்காக நான் நன்றியுடையவனாக இருக்கட்டும்; இரண்டாவதாக, அவர்கள் என் பணப்பையை எடுத்துக்கொண்டபோது, எனது உயிரை எடுக்காமல் விட்டதற்காக நன்றி; மூன்றாவதாக, அவர்கள் என்னுடையது எல்லாவற்றையும் களவாடிச் சென்றிருந்தாலும், அது அவ்வளவு அதிகமாக இல்லாமல் இருந்ததற்காக நன்றி; நான்காவதாக, மற்றவர்களுடையது அல்ல. என்னுடையது (நான்தான்) தான் கொள்ளையடிக்கப்பட்டது, அதற்காக நன்றி.[12]

"மேல் தாடையில் ஒரு பல், கீழ்தாடையில் ஒரு பல் என இரண்டு நல்ல பற்களாவது மிஞ்சி இருக்கின்றன, எனது உணவை அவைகளால் நான் மென்று தின்கிறேன். அதற்காக நன்றி கர்த்தாவே" என ஜெபித்த ஒரு மூதாட்டியின் கதை சொல்லப்படுகிறது.[13]

சூனேமியாப் பெண் செய்தவைகளுக்காக எலிசா நன்றியுள்ளவராக இருந்தார். மற்றவர்கள் நமக்கு செய்கிறவைகளுக்காக நாம் நன்றியுடைவர்களாக இருக்க வேண்டும் மற்றும் அதை அவர்கள் செய்ய கடமைபட்டிருந்தார்கள் என்று எண்ணிவிடக்கூடாது. பைரி சரோன் என்பவர், ''நன்மைகளை பெறுகிறவர் அதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது; நன்மைகளை செய்கிறவர் அதை ஒருபோதும் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடாது'' என்று எழுதினார்.[14] சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாய் இருக்கிற நம்முடைய தேவனுக்கு நாம்

எப்போதும் நன்றியுடைவர்களாக இருக்க வேண்டும் (யாக்கோபு 1:17). தனது கணவரின் கல்லறையை அடையாளப்படுத்திய கல்வெட்டில் ஒரு மலைப்பகுதி பெண்: “அவர் எப்போதும் என்னை பாராட்டினார்” என வடித்திருந்தாள்.[15] நம் ஒவ்வொருவரைக் குறித்தும் எப்போதும் இவ்விதமாக சொல்லப்படுமானால், அது ஆச்சரியமானதாக இருக்காதா?

**நன்றியறிதல்: ஒரு செயல்**

எலிசா தன் பாராட்டுதலை தெரிவித்த பிறகு, தான் அவளுக்கு என்ன செய்யக்கூடும் என வினவினார். “உங்களுக்கு நன்றி” என *சொன்னதோடு* அவர் நிறுத்திக்கொள்ள விரும்பவில்லை; அவன் தான் எவ்வளவு நன்றியுடையவராக இருந்தார் என்பதை *காண்பிக்க* விரும்பினார். அவன், “ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேசவேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக்கேள்” என்றான் (2 இராஜாக்கள் 4:13ஆ). உலகில் எனது பகுதியில், நாங்கள் இதை பின்வருமாறு கூறுவோம், “உன்னைக் குறித்து ஒரு நல்ல வார்த்தை சொல்லிவைக்கட்டுமா?” இஸ்ரவேல் தேசத்தில் ராஜா மற்றும் சேனைத் தலைவர் ஆகிய இருவரும்தான் மிக அதிக அதிகாரம் உடையவர்களாக இருந்தார்கள். தீர்க்கதரிசி அவர்கள் இருவருடைய உயிரையும் காப்பாற்றியிருந்தார் (2 இராஜாக்கள் 3); ஆகவே அவர்கள் இவருக்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். இவருடைய நியாயமான வேண்டுகோளை மறுக்கமாட்டார்கள். ராஜாவிடத்தில் பேசுவதின் மூலம் அந்த பெண் மற்றும் அவளுடைய கணவர் ஆகிய இருவருக்கும் ராஜசமூகத்தில் எலியா நல்ல ஒரு இடத்தை பெற்றுத் தந்திருப்பார் அல்லது ராஜ மரியாதையை பெற்றுத் தந்திருப்பார் (வரிச் சலுகைகள் உள்பட[16]). அந்த பெண் மற்றும் அவள் கணவர் ஆகியோருடைய சட்ட உரிமைகளை நிலை நாட்டும்படி சேனைத்தலைவரை அவர் கேட்டிருக்கக்கூடும்.

நாட்டின் உயர்ந்த அதிகாரமுடையவர்களிடத்தில் செல்வாக்குள்ள ஒருவர் உங்களுக்கு இப்படிப்பட்ட அளிப்புகளை கொடுக்க முன்வந்திருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் பதிலுரைப்பு என்னவாக இருக்கும்? நீங்கள் எதைக் கேட்பீர்கள்? இந்த கேள்விகளுக்கான உங்கள் பதில் எதுவாக இருந்தாலும், அதை அந்த பெண்ணுடைய பதிலுரைப்போடு ஒப்பிட்டுபாருங்கள். அதற்கு அவள், “என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன்” என்றாள் (2 இராஜாக்கள் 4:13இ). அவள் தன் பதிலில் வாய்மொழி “சுறுக்கெழுத்தை” பயன்படுத்தினாள். CJB மொழிபெயர்ப்பு அவள் பதிலை இவ்விதம் விரித்து கூறுகிறது: “எனது சொந்த ஜனங்களின் நடுவில் நான் இருக்கும்படி, மகிழ்ச்சியாய் வாழ்ந்து வருகிறேன்.” வேறு வார்த்தைகளில் கூறுவதெனில், “எனக்கு எந்த அரசு அல்லது இராணுவ சலுகைகளும் வேண்டாம். அரசரின் மாளிகையைவிட, சூனேமிலுள்ள எனது வீட்டையே நான் அதிகம் விரும்புகிறேன். என் குடும்பத்தார், நண்பர்கள் அல்லது அயலகத்தாரோடு எனக்கு எவ்வித சண்டை சச்சரவுகளும் இல்லை. நான் இங்கே மகிழ்ச்சியாய் வாழ்ந்து வருகிறேன்!” “எனக்கு எதுவும் பலன் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் இதை செய்யவில்லை. உங்களுடைய ஊழியத்தில் உதவி செய்ய எனக்கு கிடைத்த வாய்ப்பே போதும், அதுவே நல்ல பலனாக இருக்கிறது” என்பதையும் அநேகமாக அவள் உணர்த்தினாள். அவளுடைய பதிலை LB இவ்விதம் சுருக்கி கூறுகிறது: “நான்

பிரபூரணமான திருப்தியோடு இருக்கிறேன்."

நான் ஆச்சரியத்தில் திளைக்கிறேன். இந்த பெண் உபசரிக்கிறவளாக மட்டும் அல்ல, அவள் *திருப்தியுள்ள* ஒரு இருதயத்தையும் உடையவளாக இருந்தாள்! அவளுக்காக நான் ஒரு நினைவு சின்னத்தை எழுப்பி, அதின் அடியில் "ஒரு திருப்தியாயிருந்த பெண்" என்ற வார்த்தைகளை எழுத வேண்டும்போல் இருக்கிறது. வேதாகமம், "... உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்" என கட்டளையிடுகிறது (எபிரெயர் 13:5; KJV; காண்க பிலிப்பியர் 4:11; 1 தீமோத்தேயு 6:8); ஆனால் நம்மில் ஒரு சிலர் மட்டுமே இந்த இலக்கை எட்டுகிறோம். ஒவ்வொரு திருப்தியான இருதயத்திற்கும் திருப்தி என்றால் என்ன என்பதை ஒருபோதும் அறிந்திராத, அமைதியற்ற எண்ணிலடங்காத இருதயங்கள் இருக்கின்றன. நாம் நமக்கு இருக்கிறவைகள் போதுமென்ற மனநிறைவோடு வாழ்வதற்கு சூனேமியாளின் முன் உதாரணம் ஒருவேளை உற்சாகப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இந்த சுறுக்கமான பதிலுரைக்கு பின்பு, அநேகமாக அந்த பெண் அறையை விட்டு கடந்து சென்று விட்டாள். நான் எலிசாவாக இருந்திருந்தால், தோள்களை அசைத்து, "நான் முயற்சி செய்தேன்" என்று சொல்லிவிட்டு, அந்த காரியத்தை மனதில் வைக்காமல் விட்டிருப்பேன். ஆனால் தீர்க்கதரிசி தனது நன்றியறிதலாக *ஏதாகிலும்* செய்யவேண்டுமென தீர்மானமாயிருந்தார். "அவளுக்கு செய்யவேண்டியது என்ன?" என அவர் கேயாசியினிடத்தில் ஆலோசனை கேட்டார் (2 இராஜாக்கள் 4:14அ).

அவன், "அவளுக்கு பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன்" என்றான் (வசனம் 14ஆ). அந்த நாட்களில் மலடியாய் இருப்பது ஒரு சாபம் என கருதப்பட்டது (காண்க 1 சாமுவேல் 1:6, 7). இன்று பிள்ளை யில்லாதிருப்பது வருத்தமானது, அன்று அது சோகமானதாயிருந்தது. ஒரு மகன் இல்லாமல் இருப்பது எப்படிப்பட்டது என்பதை ராபர்ட் வானோய் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:

> ... அந்த குடும்பத்தின் பெயர் அற்றுப்போகும் மற்றும் அதின் நிலபுலன்கள் மற்றும் இதர சொத்துக்கள் மற்றவர்களுக்கு போய்விடும். இந்த இளம் விதவைக்கு பாதுகாவலரோ அல்லது பராமரிப்பாளரோ இல்லாமல் இருப்பதால் அவளுடைய எதிர்காலம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது - பிள்ளைகள்தான் அந்த விதவைக்கு ஒரே சமூகப் பாதுகாப்பாக இருந்தார்கள் ...[17]

எலிசா தாமாகவே ஏன் இப்படிச் சிந்திக்கவில்லை? ஏனென்று என்னால் கூற இயலாது. ஆனால் சிலசமயம் காரியங்களை பிறரோடு பேசும்போது உதவியாக இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இதனால் நமக்கு தோன்றாத சில நல்ல (சிலவேளையில் "தெளிவான") ஆலோசனைகள் கிடைக்கும்.

கேயாசி கூறியதை எலிசா விரும்பினார். தீர்க்கதரிசி அந்த தேசத்தின் ராஜசமூகத்தில் ஒரு நல்வார்த்தை/பரிந்துரை அந்த பெண்ணுக்காக சொல்ல இயலாமல் போய்விட்டாலும், அவர் பரலோகத்தில் தேவ சமூகத்தில் "ஒரு நல் வார்த்தை" சொல்லக்கூடும்.[18] தன் வேலைக்காரன் மூலம் மீண்டும் அந்த பெண்ணை வரவழைத்தார் (2 இராஜாக்கள் 4:15அ). அவள், "வந்து

*வாசற்படியிலே நின்றாள்" (வசனம் 15ஆ), தேவனுடைய ஊழியக்காரருக்கு எந்த நிந்தையும் வராதபடி இப்போதும் அவள் எச்சரிக்கையாயிருக்கிறாள்.*

*இம்முறை எலிசா அந்த பெண்ணிடம் நேரில் பேசினார். அப்பொழுது அவன்: "ஒரு பிராண உற்பத்தி காலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய்" என்றான் (வசனம் 16அ).* NCV *மொழிபெயர்ப்பில், "அடுத்த ஆண்டு இந்த நேரத்தில், உன் கரங்களில் ஒரு மகனை ஏந்திக்கொண்டிருப்பாய்" என்றுள்ளது.*

*அந்த பெண் திகைப்புற்றாள். அதற்கு அவள்: "ஏது? தேவனுடைய மனுஷனாகிய என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்றாள்" (வசனம் 16ஆ). பிற்பாடு, தனது பதிலை சுருக்கமாக, "எனக்கு அபத்தம் சொல்ல வேண்டாம்" என்று கூறினாள் (வசனம் 28). அவள் எலிசாவின் நேர்மையை சந்தேகிக்கவில்லை; நாம் கூறுகிறபடி "அந்த செய்தி உண்மையாய் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை" என அவள் நினைத்தாள்.* NIV *மொழிபெயர்ப்பில், வசனம் 28இல், "எனக்கு நம்பிக்கை ஊட்டாதே" என வந்துள்ளது. அந்த பெண் தனக்கு எதுவும் தேவையாயிருக்கவில்லை. தன் வாழ்க்கை நிறைவாயிருந்தது என்பதை தெரிவித்திருந்தாள் - ஆனால் எவ்வளவு ஆழமாக அவள் ஒரு மகனை வாஞ்சித்தாள் என்பதை அவள் உணர்வுகள் வெளிப்படுத்தின. அவள் அநேகமாக நீண்ட காலத்துக்கு முன்பே நம்பிக்கை இழந்திருந்தாள் என்பதையும் அது அடையாளப்படுத்தியது. அவளுடைய பதிலை நாம் இவ்விதமாய் வேறு வார்த்தைகளில் கூறலாம்: "ஒருபோதும் சாத்தியமாயிராத ஏதோ ஒன்றைக்குறித்த ஒரு வாக்குத்தத்தத்தால் என்னை சித்திரவதை செய்யவேண்டாம்!" தூதர்கள் ஆபிரகாமினிடத்தில், சாராள் வயது சென்றவளாயிருந்தாலும் ஒரு குமாரனை கொண்டிருப்பாள் என கூறியபோது, சாராள் அளித்த பதில்தான் நமக்கு நினைவுக்கு வருகிறது (ஆதியாகமம் 18:10-12).*

*சாராளைக் குறித்து பேசும்போது, இந்த சூனேமிய பெண் அந்த நற்குணசாலியான மூதாதையரின் வழித்தோன்றலாக இருந்தாள் மற்றும் "கர்த்தரால் ஆகாத காரியம்" ஒன்றும் இல்லை என்பதை அவள் நினைவு கூர்ந்திருக்க வேண்டும். (ஆதியாகமம் 18:14). தேவனானவர் இடைபட்டு, ஒரு மலடியான பெண் பிள்ளை பெற பெலப்படுத்தினது இது முதல் முறை அல்ல - அல்லது இது கடைசி முறையாகவும் இராது (ஆதியாகமம் 18:1-15; நியாயாதிபதி கள் 13:2-24; 1 சாமுவேல் 1:1- 20; லூக்கா 1:5-25, 57-66).*

*கர்த்தர் அந்த பெண்ணை ஏமாற்றிவிடவில்லை. அந்த ஸ்திரீ "கர்ப்பந்தரித்து,[19] எலிசா தன்னோடே சொன்னபடி, ஒரு உற்பத்தி காலத்திட்டத்தில் ஒரு குமாரனை பெற்றாள்" (2 இராஜாக்கள் 4:17). உங்களுக்கு பிள்ளைகளோ அல்லது பேரப்பிள்ளைகளோ இருக்கிறார்களா? நீங்கள் ஒரு கைபிள்ளையை அல்லது சிறு குழந்தையை கவனித்திருக்கிறீர்களா? அப்படியானால், இந்த நிகழ்வின் சங்கிலித் தொடரை நீங்கள் எளிதில் கற்பனை செய்யக்கூடும்.*

- *அந்த பெண்ணுக்கு அவள் தாய்மை அடைந்திருந்ததை உணர்ந்தபோது ஏற்பட்ட சந்தோஷம், முதல் முறை கற்பத்திலிருந்த சிசு அவளை வயிற்றில் உதைத்தபோது அவளுக்கு ஏற்பட்ட அளவு கடந்த மகிழ்ச்சி.*
- *பிரசவத்திற்கு பிறகு, தன் கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கும் புதிய*

மகனை முகத்தில் ஆச்சரியத்தோடு கீழே பார்க்கிறாள். பின் தேவனுடைய ஈவுக்காக அவருக்கு நன்றி செலுத்த மேலே பார்க்கிறாள்.

- அடுத்த முறை எலிசா அந்த வழியாய் பயணித்தபோது, தாய் தன் குழந்தையை பார்க்கும்படி அவரை அழைத்துச் செல்கிறாள்.
- அவரது அடுத்த வருகைகளின்போது, தாய் எலியாவிடம் அந்த குழந்தைக்கு முதல் பல்முளைத்தது பற்றி, அது பேசிய முதல் வார்த்தை பற்றி, எடுத்துவைத்த முதல் கால் அடிபற்றி பெருமையோடு கூறுகிறாள் - அந்த குழந்தை அவர்கள் காலடியில் மகிழ்ச்சியோடு விளையாடிக்கொண்டிருந்தது.

எலிசா முந்திய காலத்தில் வாழ்ந்த மாபெரும் தேவ மனிதர்களைப்பற்றிய கதைகளை கூறியபோது, அந்த சிறுவன் அவர் மடியில் அமர்ந்து அவைகளை கேட்டது சாத்தியமாயிருந்ததா? குறைந்தபட்சம் இந்த தாராளகுணமுள்ள பெண் மகிழ்ச்சியாய் இருந்ததைப் பார்த்து எலிசா புன்னகைத்தார் என நான் நம்புகிறேன். மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுப்பதில்தான் நமது உண்மையான மகிழ்ச்சிவருகிறது.

## முடிவுரை

நாம் கதையை அடுத்த பாடத்தில் தொடருவோம், இந்த பாடத்தில் நமக்கு பொருந்தக் கூடிய பல சத்தியங்களை வலியுறுத்தினோம். ஆனால் இவற்றைவிட வேறு எதுவும் மிகவும் முக்கியமானதல்ல: உபசரிக்கவேண்டியவர்களாய் இருப்பதின் அவசியம் மற்றும் நன்றியுள்ளவர்களாய் இருப்பதின் அவசியம். நாம் அதிக நன்றியுடையவர்களாக இருக்கும்படியும் மற்றும் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் அதிகமாக நன்றி மற்றும் பாராட்டுதலை தெரிவிக்கிறவர்களாக இருக்கும்படியும் நாம் உற்சாகப்படுத்தப்பட்டோம் என நான் நம்புகிறேன்.

இதை நிறைவு செய்கையில், நமது வசனப்பகுதியிலிருந்து ஒரு கடைசி செய்தியை குறிப்பிட விரும்புகிறேன். சூனேமிய பெண் ஒரு மகனுக்கான எலிசாவின் வாக்குத்தத்தத்தை நம்புவதை கடினமானதாகக் கண்டாள். இருப்பினும், தீர்க்கதரிசி என்ன நிகழும் என்று சொன்னாரோ, அது துல்லியமாக அப்படியே நிறைவேறியது. தேவன் நமக்கு அவருடைய வசனத்தில் அற்புதமான வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார்:

- நாம் அவருடைய குமாரனை விசுவாசித்து, திருமுழுக்கு பெற்றால், நம் கடந்தகால பாவங்கள் எல்லாம் கழுவப்படும் (மாற்கு 16:16; நடபடிகள் 22:16).
- நாம் அவரை விசுவாசித்து, கீழ்ப்படிந்தால், அவர் நம்மோடு இருப்பார், நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார் (மத்தேயு 28:19, 20; எபிரெயர் 13:5).
- நாம் நம்மை சார்ந்து கொள்ளாமல், அவருடைய இரக்கங்களை சார்ந்து கொண்டு, உண்மையாய் வாழ்வோமானால் (எபேசியர் 2:4), கண்ணீரும் வேதனையும் இல்லாத இடமாகிய பரலோகத்தில், நாம் நித்தியமாக அவரோடு வாழும்படி, அவர் நம்மை அங்கே அழைத்துச்செல்வார் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 2:10; 21:3, 4).

*சிலர் அந்த சூனேமிய பெண்ணைப்போல, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் "நிறைவேற கடினமானவைகள்" என கருதுகின்றனர். நீண்ட காலத்திற்கு முன்பு அந்த இரக்கமுள்ள பெண்ணுக்கு வாக்குத்தத்தங்களை நிறைவேற்றின கர்த்தர், நிச்சயமாகவே நமக்கான அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என நீங்கள் நம்பிக்கை உடையவர்களாக இருக்கலாம். நீங்கள் உங்கள் வாழ்க்கை - மற்றும் உங்கள் நித்தியத்தை - அவரிடம் ஒப்புக்கொடுக்கலாம். நீங்கள் அவருடைய வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக மற்றும் விருப்ப மாக இருக்கிறீர்களா? அப்படியானால் இன்றே அவரண்டை வாருங்கள்!*

---

*குறிப்புகள்*

[1]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 59. [2]*ஒரு இளம் பெண் ஏன் ஒரு வயதான மனிதருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள்? அநேகமாக, இது பெற்றோரால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமண மாக இருந்தது.* [3]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 203. [4]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 529. [5]Adapted from an article by Karen Maines, quoted in Robert J. Morgan, *Nelson's Complete Book of Stories, Illustrations, & Quotes* (Nashville: Thomas Nelson Publishers, 2000), 452. [6]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3*, 1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 310; G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1&2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 65; James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 50. [7]Rawlinson, 65. [8]Quoted in Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations: Signs of the Times* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 1461. [9]Ibid. [10]Ibid., 1457.

[11]Ibid., 1456. [12]Quoted in James S. Hewitt, ed., *Illustrations Unlimited* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1988), 264. [13]Ibid., 263. [14]Quoted in Herbert V. Prochnow, *1400 Ideas for Speakers and Toastmasters* (Grand Rapids, Mich.: Baker Books, 1994), 114. [15]Hewitt, 264. [16]Wiseman, 204. [17]Vannoy, 529. [18]Matthew Henry, *Commentary on the Whole Bible*, ed. Leslie F. Church (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1961), 404. [19]*அவளால் எப்படி தாய்மை அடைய முடிந்தது என்பது பற்றிய குறிப்புகள் எதையும் வேதாகமம் கொடுக்கவில்லை. அந்த "வயதான" கணவரின் வாழ்க்கையில் ஒரு அற்புதம் நிகழ்த்தப்பட்டது என்பது எனது யூகம்.*